ප්‍රාදේශීය සංවර්ධන අමාත්‍යාංශය
பிரதேச அபிவிருத்தி அமைச்சு
Ministry of Regional Development

# ශ්‍රී ලංකා හදබිම අධිකාරිය
# இலங்கை ஹதபிம அதிகாரசபை
# HADABIMA AUTHORITY OF SRI LANKA





# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT 2016



# இலங்கை ஹதபிம அதிகாரசபை

## வருடாந்த அறிக்கை - 2016


கொழும்பு பணிமனை # பிரதேச அபிவிருத்தி அமைச்சு

3 ஆவது மாடி, இல.1090" ஶ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய"

கண்டி பணிமனை # த.பெ.இல.09 கண்ணொறுவை, பேராதனை.

தொலைபேசி # 011-3355098 0812-388107

தொலைநகல்# 0812-388132

மின்னஞ்சள் # authority.hadabima@gmail.com

இணையதளம் # www.hadabima.gov.lk

# உள்ளடக்கம்

பக்க இலக்கம்


| | | |
|---|---|---|
| 01. | கௌரவ தலைவரது ஆசிச் செய்தி | 01 |
| 02. | பிரதித் தலைவரது ஆசிச் செய்தி | 02 |
| 03. | நிறைவேற்றுப் பணிப்பாளரது ஆசிச் செய்தி | 03 |
| 04. | இலக்கு மற்றும் நோக்கம் | 04 |
| 05. | அறிமுகம் | 05 |
| 06. | நிர்வாகப் பிரிவின் தகவல்கள் | 06-11 |
| | • நிர்வாகப் பிரிவு – தாபன தகவல்கள் | 06-08 |
| | • பணிப்பாளர் சபை ஒன்றுகூடல்கள் இடம் பெற்ற திகதி | 09 |
| | • அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் | 10 |
| | • நிறுவன ஒழுங்கமைப்பு | 11 |
| 07. | 2016 ஆம் ஆண்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 12-23 |
| | • ஆரம்ப பாதுகாப்பு திட்டமிடல் | 12 |
| | • கிராமிய தலைமைத்துவ அபிவிருத்தி வேலைத்திட்டம் | 13 |
| | • விடயவிதான பயிற்சி வேலைத்திட்டம் | 14 |
| | • மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரிகளை ஸ்தாபித்தல் | 15 |
| | • “மாணவ அறிவு காப்பரன்” பாடசாலை சூழல் வேலைத்திட்டம் | 17 |
| | • நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு வேலைத்திட்டம் | 19 |
| | • மண்ணரிப்பு பாதுகாப்பு கட்டமைப்பை ஸ்தாபித்தல் வேலைத்திட்டம் | 21 |
| | • திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு | 23 |
| | • மனிதவள மற்றும் பௌதீக வள அபிவிருத்தி | 23 |
| 08. | சந்தை மேம்பாட்டு கருத்திட்டம் | 24 |
| 09. | கணக்கீட்டு தகவல்கள் | 31-41 |
| 10. | கணக்காய்வுத் தகவல்கள் (2016.12.31 ஆம் திகதி அன்று மடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரது அறிக்கை) | 42-60 |

## இலங்கை ஹதபிம அதிகார சபையின் தலைவரது ஆசிச் செய்தி



இலங்கையில் சூழல் தொடர்பாடல் வலயங்களில் ஏற்படுகின்ற மற்றும் பல்வேறு விதமான சூழல் சமமின்மை பிரச்சினைகள் என்பன தேசிய ரீதியான மாபெரும் பிரச்சினையாக திகழ்வதை காணலாம். இவற்றிற்கிடையெ இந்த பிரதேசங்களில் ஏற்படுகின்ற மண்ணரிப்பு சூழல் சமமின்மையை ஏற்படுத்துகின்ற பிரதான காரணியாக விலங்குகின்றது. இந்த பிரதேசங்களில் இடம் பெற்று வந்த தொடரான காப்பு முறையானது குடியேற்ற ஆட்சி முறை நிலவிய காலப்பகுதியில் பதிலீடு செய்யப்பட்ட தோட்டப் பொருளாதார பயிர் காரணமாக அழிந்து போன இந்த சமநிலையான சூழல் வளையமைப்பை சமநிலையற்றதாக மாற்றுவதற்கு காரணமாக இருந்ததுடன் அதன் ஊடாக ஏற்படுகின்ற மண் அரிப்பு மற்றும் மண் வளம் எடுத்துச் செல்லலை குறைத்துக் கொள்ளல் அவற்றில் சிலவாகும். இந்நிலமையை குறைத்துக் கொள்வதன் பொருட்டு 1971 ஆம் அண்டின் 11 ஆம் இலக்க விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபன சட்டத்திற்கு அமைய 1978 ஆம் ஆண்டு தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் 1991 ஆம் ஆண்டு இந்த அதிகாரசபை மேலும் விஸ்தரிக்க வேண்டியதாயிற்று ஆதலால் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ பெயர் இலங்கை பச்சைப் புல்வெளி அதிகாரசபை (இலங்கை ஹதபிம அதிகாரசபை) ஆக திருத்தம் செய்யப்பட்டது அல்லது பெயர் மாற்றம் செய்யப்பட்டது எனலாம். அக்காலப்பகுதியில் பல்வேறு சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒதுக்கீடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட இந்த அதிகார சபை பொதுத் திறைசேரியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்துவற்கு ஆரம்பித்தது எனலாம். இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தேசிய முக்கியத்துவம் கொண்டதாக அமைந்ததே இதற்க காரணமாகும்.

இந்த பொற்காலத்திற்குப் பின்னர் இலங்கை ஹதபிம அதிகார சபையின் இலக்காகக் கொண்ட பிரதேசங்களில் இது வரைக்கும் காணிகள் 75000 ஹெக்டேயருக்கும் கிட்டிய அளவு நிலப் பரப்பில் விவசாய பண்ணைகள் ஏறத்தாள 125000 இற்கும் கிட்டிய தொகையினரைக் கொண்ட சமூக பங்குபற்றுகையுடன் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இங்கு சூழல், சமூக பொருளாதார பெறுமதி அதிகளவில் இங்க காணப்படுவதால் இங்கு உள்ள மக்கள் விவசாய துறையில் இருந்து பெற்றுத் தருகின்ற பங்களிப்பானது பெரிதும் மெச்சத் தக்கதாக இருந்தது எனலாம்.

2016 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தின் வரலாற்றினுள் சந்திக்கின்ற ஆக்கபூர்வமான திரும்பல்களின் இலட்சனையாக எங்களுக்கு கிடைக்கப் பெறுவது ஏறத்தாள கடந்த 30 வருட காலப்பகுதியினுள் விவசாய அமைச்சுக்கு உரித்தான இந்த நிறுவனம் புதிய அரசின் அபிவிருத்தி இலக்கிற்கு அமைய பிரதேச அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. அத்துடன் அதிகார சபையின் நாடளாவிய ரீதியான விரிவாக்கல் அபிபிவிருத்தி, அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்கின்ற செயற்பாடாக நியமிக்கப்பட்டதுடன் அதனால் சூழல் சமூக பொருளாதார வகையில் உபாய முறைகள் இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அதிகார சபையின் விஷேடமான வெற்றிகரமானவையாக காணப்பட்டது எனலாம்.

இந்தப் பின்னனியின் கீழ் 2016 ஆம் ஆண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு திறைசேரியினால் ரூபா 70 மில்லியன் நிதி தொகை பெற்றுத் தரப்பட்டதுடன் இந்த நிதியை பயன்படுத்திக் கொண்டு கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருணாகலை, பதுலை போன்ற மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகள் 40 இனை உள்ளடக்கியதாக 3000 ஏக்கர் பரப்பளவான காணியின் பாதுகாப்பு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு இருந்தது.

அதற்கு அமைய 1978 இன் 38 ஆம் இலக்கம் கொண்ட நிதி சட்டத்தின் 40 - 2 ஆம் பிரிவிற்கு அமைய 2016 ஆம் ஆண்டின் பொருட்டு இலங்கை ஹதபிம அதிகாரசபை வருடாந்த அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். அத்துடன் 2016 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அதன் இலக்குகளை வெற்றிகரமாக முடிவருத்தும் பொருட்டு இலங்கை ஹதபிம அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் சார்பில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர், பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், உற்பட பதவியனியினர் ஆகியோர் காட்டிய அன்னியொன்யமான ஈடுபாடு தொடர்பிலும் எனது உள்ளம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றென். அத்துடன் அவ்வாறே இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதன் பொருட்டு மிகவும் அர்ப்பனிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரதித் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் உட்பட பதவியனியினருக்கு எனது கௌரவமான நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதில் நின்றும் பெறுமிதம் அடைகின்றேன்.

நந்தசேன ஹெரத்
தலைவர்



## இலங்கை ஹதபிம அதிகார சபையின் பிரதித் தலைவரது ஆசிச் செய்தி

உலகில் எல்லா நாடுகளிலும் சூழல் பாதுகாப்பு, நிலையான அபிவிருத்தி, தொடரான அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பில் என்றும் இல்லாதவாறு கூடிய கவனம் செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அந்நிலமைக்கு பிரதான காரணியாக அமைவது யாதெனில் மனித செயற்பாடுகளில் நேரடி பெறுபெறாக சூழல் வளையமைப்பின் சமமின்மை ஏற்படுதல் மற்றும் அவ்வாறு சூழல் சமமின்மை ஏற்படுவதன் காரணமாக மொத்த மனித வளத்திற்கும் அச்சுருத்தல் ஏற்பட்டு இருப்பதாகும். அதற்கு அமைய பாரிய புவியியல் பல்வகைமையுடன் இலங்கையின் சூழல் பாதுகாப்பு செய்து கொள்வதன் மூலம் மனித சமூகத்தை பாதுகாக்க வேண்டிய சவாலுக்கு என்றும் இல்லாதவாறு நாம் முகம் கொடுத்து வருகின்றோம்.

இந்த சவால்களை வெற்றிக் கொள்ளும் பொருட்டு மிகவும் செல்வாக்கு கொண்டுத் திகழும் அரச நிறுவனங்கள் மத்தியில் இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு மிகவும் விஷேடத்துவமான ஸ்தானம் ஒன்று கிடைப்பதற்கு காரணமாக அமைந்த விடயம் யாதெனில் சூழல் சமமின்மையை ஏற்படுத்துகின்ற பிரதானமான காரணியான மண்ணரிப்பை குறைத்துக் கொள்வதன் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற வெற்றிகரமான நடவடிக்கைகளினால் ஆகும். கடந்த 100 வருடக காலப் பகுதியினுள் இலங்கையின் மொத்த நிலப் பரப்பில் 30 செ.மீற்றர் அளவில் வளமான மண்கள் கடலுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 1/3 அளவிலான நிலப்பரப்பு பொருளாதார காரணிகளாக மாற்றம் பெறுவது அவதானம் செலுத்தக் கூடியதாக உள்ளது என கடந்த காலத்தில் தேசிய அணுவலு சக்தி அதிகார சபை வெளிப்படையாக முன்வைத்தது. அவ்வாறே இலங்கையில் சில பிரதேசங்களில் நிலங்கள் பாலைவனமாக மாற்றம் பெறுகின்றன என உலக சூற்றாடல் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. அவ்வாறே இலங்கையில் வளிமன்னடலத்தின் வெப்பநிலை உயர்வடைந்து காணப்படுவதையும் அவதாணிக்கக் கூடியதாக உள்ளது என உலக சுகாதார அமைப்பு சுட்டிக் காட்டி உள்ளதை குறிப்பிடலாம்.

இந்த சகலதும் எதிர்வு கூறலுக்கு அமைய நாம் மேற்கொள்ள வேண்டி இருப்பது சூழல் சமநிலையை பாதுகாத்துக் கொள்வதற்கான சவால்களை வெற்றி கொள்வதாகும். இந்த நோக்கங்களை மையமாகக் கொண்டு 1978 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு பெறுக்கங்கள் முறையாக கடந்து சென்று இது வரையில் இலங்கை ஹதபிம அதிகார சபையாக இந்த செயற்பாட்டின் பொருட்டு மிகவும் விஷேடமான பங்களிப்புக்களை பெற்றுத் தந்துள்ளது. இந்த கணக்காய்வு காலப் பகுதியில் மிகவும் சாதகமான சீராக்கங்களாக 2016 ஆம் ஆண்டு இலங்கை ஹதபிம அதிகார சபை விவசாய விடயப் பரப்பில் இருந்து நீங்கி பிரதேச அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்டமையாகும். அதற்கு அமைய மிகவும் விரிவாக சமூக / சூழல் மனித நலநோம்பல் விடயங்கள் சாதகமான முறையில் மேற்கொள்வதை இலக்காக் கொண்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு இதன் பொருட்டு நாளாந்தம் சூழல் செயற்பாடுகளை நிர்மானித்துக் கொள்வதற்கு இயலுமாக இருந்தமை அதிகார சபைக்கு கிடைத்த மிகவும் சிறந்த வெற்றியாக குறிப்பிடலாம். அவ்வாறே இந்த நோக்கத்தை அடைவதை இலக்காகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டமிடல்களாகும். இவ்வாறு உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளினுள் உச்ச அளவில் செயலாற்றுகையை பெற்றுக் கொள்வதற்கு இயலுமாக இருந்தமை தொடர்பில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதற்கு அமைய 2016 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் அதிகார சபை புதிய அபிவிருத்தி செயற்பாட்டின் உட்பிரவேசித்தல் பொருட்டு தேவையான உதவிகள் நல்குதல் மற்றும் வழிகாட்டல்களை பெற்றுத் தந்த பிரதேச அபிவிருத்தி விடயப் பொறுப்பு கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உட்பட சகல பதவியனியினருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

அவ்வாறே அதிகார சபையின் மொத்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் ஊடாக உச்ச செயலாற்றுகையை அடைந்து கொள்வதன் பொருட்டு மிகவும் அர்ப்பனத்துடன் நடவடிக்கை மேற்கொண்ட தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், உட்பட சகல பதவியனியனிருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதில் நின்றும் மிகவும் மகிழ்சி அடைகின்றேன்.

லலிந்த நாககதென்ன
பிரதித் தலைவர்
இலங்கை ஹதபிம அதிகார சபை



## இலங்கை ஹதபிம அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளரது ஆசிச் செய்தி

ஏறத்தள கடந்த 40 வருட காலப் பகுதியில் விவசாய அமைச்சின் விடயப் பரப்பிற்கு சொந்தமாக இருந்த இலங்கை ஹதபிம அதிகார சபை புதிய அரசாங்கத்தின் குறிக்கோள்களுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு முதல் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் ஊடாக இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி ரீதியான உட்பிரவேசமானது புதிய ஒரு உலகிற்கு கொண்டு செல்கின்றது. அதற்கு அமைய மாவட்டங்கள் பலவற்றிற்கு வரையறுக்கப்பட்டு இருந்த அதிகார சபையின் செயற்பாடுகள் நாடலாவிய ரீதியில் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இது வரையில் சுற்றாடல் பாதுகாப்பு துறையில் தங்கி வாழ்கின்ற விவசாயம் மற்றும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அத்தகைய தேவைப்பாடுகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாதவாறு வர்த்தக விவசாய துறையினை மேலும் மேம்படுத்தவதற்காகவும் மற்றும் விவசாய அபிவிருத்தியின் பொருட்டும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2016 ஆம் ஆண்டு முதற் காலப் பகுதியில் ஏற்பட்ட இந்த மாற்றத்தின் காரணமாக இந்த புதிய உட்பிரவேசத்தின் பொருட்டு தேவையான ஆரம்பப் பின்னனிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2016 ஆம் ஆண்டு ஆலோசிக்கப்பட்டு இருந்த செயற்பாட்டு அபிவிருத்தி திட்டமிடல்களுக்கு அமைய அந்த வருடத்தினுள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இதன் பொருட்டு அதிகார சபைக்கு பொது திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற ரூபா 70 மில்லியன் நிதியை உபயோகித்துக் கொண்டு மண்ணரிப்பு பாதுகாப்பு மற்றும் நீர்வரப்பு முகாமைத்துவம் என்பவற்றை பிரதானமாகக் கொண்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் உரிய இலக்கினை அடைந்துக் கொள்வதற்கும் இயலுமாக இருந்தமை அதிகார சபையின் மா பெறும் வெற்றியாகும். விஷேடமாக அதிகார சபையின் முன்னுரிமை அபிவிருத்தி செயற்பாடுகளான மண்ணரிப்பை குறைத்துக் கொள்வதன் கீழ் காணிகள் 2741 ஹெக்டேயர் நிலப்பரப்பினை பாதுகாத்துக் கொள்ள இயலுமாக இருந்தமையாகும். இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கும் மேலாக அதிகார சபையின் விஷேடமாக வருமானம் உழைக்கின்ற வேலைத் திட்டமாக செயற்படுத்தப்படுகின்ற சந்தைப்படுத்தல் வேலைத் திட்டங்களின் ஊடாக ரூபா 79 மில்லியன் பெறுமதியான விவசாய உற்பத்திகள் இந்த இலக்காகக் கொண்ட ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அது இடைத் தரகர்களது பிடியில் இருந்து விவசாய உற்பத்திகளை அதில் இருந்தும் விடுவித்துக் கொள்ள இயலுமாக இருந்தமை அதிக சாதனை மிக்க ஒரு செயற்பாடாக திகழ்கின்றது எனலாம்.

அதற்கு அமைய 2016 ஆம் ஆண்டு இலக்காகக் கொண்ட அபிவிருத்தி ஆண்டினுள் இலக்காகக் கொண்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக முடிவுருத்தியதன் பொருட்டு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் உதவிகளை பெற்றுத் தந்த பிரதேச அபிவிருத்தி அமைச்சின் விடயப் பொருப்பு அமைச்சர் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சின் சகல பதவியனியினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயன்முறையில் செயற்படுத்தகின்ற போது எனக்குத் தேவையான உதவியை பெற்றுத் தந்த தலைவர் பிரதித் தலைவர் உட்பட ஹதபிம அதிகார சபையின் பதவியினியினருக்கும் இவ்வேலையில் எனது நன்றியை தெரிவிப்பதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

கே.எஸ்.பிரேமச்சந்திர
நிறைவேற்றுப் பணிப்பாளர்
இலங்கை ஹதபிம அதிகார சபை

# இலக்கு

"மண்வளம் நிறைந்த பூமிதனில்,
வளம்மிக்க இந்தப் பூமியில் வளமான அறுவடைக் கொண்டு நிரம்பிய நாடு"

# நோக்கம்

"மண்ணரிப்பு ஏற்படும் அவலத்தை நீக்கி மண்ணரிப்பு பாதுகாப்பின் ஊடாக பூமியை வளம் பெறச் செய்து வளமான வெற்றியை பெற்று உள்நாட்டு உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தி உள்நாட்டு விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்கு பங்குதாரராகுதல்"

# அறிமுகம்

1972 இன் 11 ஆம் இலக்க விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் இலக்கம் 302/12 -1978 பெப்ரவரி 01 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமான பத்திரிகை அறிவித்தலின் ஊடாக ஆரம்பத்தில் தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையாக (நெட்சா) இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

அரம்பத்தில் இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் மைய நோக்கமாக அமைந்து இருந்தது யாதெனில் குடியேற்ற நாடாக இருந்த காலப்பகுதி முடிவுறுகையுடன் அவர்களினால் தோட்டப் பொருளாதாரத்தை தன்வசமாக்கியதன் பின்னர் எவ்விதமான பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது கைவிடப்படும் நிலைக்கு உட்பட்டு காணப்பட்ட காணிகள் காரணமாக மத்திய மலை நாட்டிலும் மற்றும் அது சார்ந்த பகுதிகளில் இடம் பெறுகினற் மண்ணரிப்பை தடுத்து, பிரதானமாக சூழல் சமமின்மையை குறைத்துக் கொள்வதை நோக்காகக் கொண்டிருந்தமை ஆகம். இந்நடவடிக்கையை மேற்கொள்வதன் பொருட்டு சமூக பங்களிப்பை பெற்றுக் கொள்கின்ற நோக்கில் இந்தக் காணிகள் விவசாயிகள் மத்தியில் பகிர்ந்து கொடுக்கப்பட்டு வசிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதின் ஊடாக இந்தப் பிரதேசம் மனித குடியேற்றப் பகுதிகளாக மாற்றம் பெறப்பட்டு பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு இருந்தன. பிரதானமாக கேகாலை மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களில் ஆகம். மஹவலி மற்றும் மா ஓயா போன்ற பிரதான ஆறுகளுக்கு உரியதான நீர் மூலப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக இந்தக் கருத்திட்டம் 1978 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது வரையில் பயன்படுத்தப்பட்ட பெயர் தேசிய விவசாய பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகார சபை என்பதற்கு பதிலாக "இலங்கை ஹதபிம அதிகார சபை" எனும் பெயரினால் அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கு அமைய "பச்சைப் புல்வெளி அபிவிருத்தி மத்திய அதிகார சபை" எனும் பெயர் 1991.11.07 ஆம் திகதி 687/15 இனைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக சாட்டப்பட்டது. 1992 ஆம் ஆண்டு அமைச்சரவையின் அனுமதியின் கீழ் கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கும் மேலாக மொனராகலை, பதுலை, இரத்தினபுரி, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் எமது அபிவிருத்தி செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

இவ்வாறு செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் பொருட்டு நிதி நன்கொடைகளின் கீழ் உலக வங்கியின் ஊடாகவும் மறறும் இரண்டாம் கட்டமைப்பின் கீழ் உலக உணவு ஒழுங்கமைப்பினால் நன்கொடை பெற்றுக் கொடுக்கப்பட்டு இருந்தது. அந்த நன்கொடைகளின் கால எல்லை முடிவுருத்தப்பட்டதன் பின்னர் இலங்கை அரசின் பொதுத் திறைசேரியினால் இதன் நிமித்தம் நிதிக் கொடைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கு அமைய வருடாந்தம் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டின் கீழ் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

1978 ஆம் ஆண்டு முதல் 6 மார்ச் 15 ஆம் திகதி வரை விவசாய அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த இந்த அதிகார சபை 2016 மார்ச் 18 ஆம் திகதிய இலக்கம் 1958/12 கொண்ட வர்த்தமான அறிவித்தலின் ஊடாக பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. 2016 ஆம் ஆண்டு இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதன் பொருட்டு அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு இருந்த நிதித் தொகை ரூபா 58.861 ஆகும். இந்த நிதி ஒதுக்கீட்டுத் தொகையை பயன்படுத்தி கேகாலை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி குருணாகலை மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகள் 40 இனை உள்ளடக்கியதாக உரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

அதற்கு அமைய 2016 ஆம் அண்டினுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்படுத்தப்பட்டது.

## இலங்கை ஹதபிம அதிகாரசபை
## 2016 வருடாந்த அறிக்கை

<u>நிர்வாக தகவல்கள்</u>

**01.** <u>பணிப்பாளர் சபை</u> - (2016. ஜனவரி முதல் பெப்ரவரி மாம் வரை)

1. திரு.நந்தசேன ஹேரத் - தலைவர் - பணிப்பாளர் சபை தலைவர்
2. திரு.ஜீ.அஜித் புஷ்பகுமார – பிரதித் தலைவர் - பணிப்பாளர் சபை உறுப்பினர்
3. திரு.எச்.எம்.பீ.ஹிடிசேகர – திறைசேரி பிரதிநிதித்துவம் - பணிப்பாளர் சபை உறுப்பினர்
4. திருமதி.சாந்தினி கோன்கஹகே - பணிப்பாளர் சபை உறுப்பினர்
5. திரு.டி.எம்.சிறிசேன திசாநாயக்க - பணிப்பாளர் சபை உறுப்பினர்
6. திரு.டீ.என்.டீ.நுகவெல - பணிப்பாளர் சபை உறுப்பினர்
7. பேராசிரியர்.எச்.எம்.எஸ்.ஹீன்கெந்த. அமைச்சின் பிரதிநிதித்துவம் -பணிப்பாளர் சபை உறுப்பினர்

<u>பணிப்பாளர் சபை</u> - (2016 ஒக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை)

1. திரு.நந்தசேன ஹேரத் - தலைவர் - பணிப்பாளர் சபை தலைவர்
2. லலிந்த நாகஹதென்ன - பிரதித் தலைவர் - பணிப்பாளர் சபை உறுப்பினர்
3. திரு.எச்.எம்.பீ.ஹிடிசேகர – திறைசேரி பிரதிநிதித்துவம் - பணிப்பாளர் சபை உறுப்பினர்
4. திரு.ஜி.எச்.ஆனந்த - அமைச்சின் பிரதிநிதித்துவம் - பணிப்பாளர் சபை உறுப்பினர்
5. திரு.கே.சந்திம பீரிஸ் - பணிப்பாளர் சபை உறுப்பினர்
6. திரு.உபாலி குணவர்த்தன - பணிப்பாளர் சபை உறுப்பினர்
7. திரு.ஜீ.கெமுனு டி.சில்வா - பணிப்பாளர் சபை உறுப்பினர்

1972 இன் 11 ஆம் இலக்கம் கொண்ட தேசிய விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1978 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி இலக்கம் 302/12 கொண்ட வர்த்தமான அறிவித்தலில் “தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை” (நெட்சா) ஸ்தாபிக்கப்பட்டது. 1991 நவம்பர் 07 ஆம் திகதி இலக்கம் 678/15 இனைக் கொண்ட வர்த்மான அறிவித்தலின் ஊடாக “தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை” (நெட்சா) என்பதற்கு பதிலாக “இலங்கை ஹதபிம அதிகாரசபை” எனும் பெயரினால் அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கு அமைய “இலங்கை பச்சைப் புல்வெளி அபிவிருத்தி மத்திய அதிகார சபை” ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இந்த அதிகார சபை 1978 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை விவசாய அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

2016 மார்ச் மாதம் 18 ஆம் திகதி இலக்கம் 1958/72 இனைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இலங்கை பச்சைப் புல்வெளி அபிவிருத்தி அதிகார சபை (ஹதபிம) 2016 மார்ச் மாதம் 16 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறும் வண்ணம் பிரதேச அபிவிருத்த அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நிர்வாக அறிக்கை

**பணிப்பாளர் சபை ஒன்றுகூடல்கள்-**

2016 ஜனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை கௌரவ விவசாய அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட தலைவர் பிரதித் தலைவர் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கலாக பணிப்பாளர் சபை ஒன்றுகூடல்கள் இடம் பெற்றன.

2016 மார்ச் மாதம் ஹதபிம அதிகார சபையின் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் கௌரவ பிரதேச அபிவிருத்தி அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டுள்ள பணிப்பாளர் சபையினால் 2016 ஒக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பணிப்பாளர் சபை ஒன்றுகூடல்கள் இடம் பெற்றன.

## 02. பதவியனியினர் விபரம் -

1. 2016 ஆம் ஆண்டு அதிகார சபையின் தலைவராக நந்தசேன ஹேரத் அவர்கள் அதிகார சபையின் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.
2. 2015.03.10 ஆம் திகதி முதல் 2016.10.18 ஆம் திகதி வரை அதிகார சபையின் உப தலைவர் ஆக திரு ஜீ.அஜித் புஷ்பகுமார அவர்கள் கடமை மேற்கொண்டிருந்தார். அத்துடன் அமைச்சு மாற்றம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் விவசாய அமைச்சில் தனது கடமையின் பொருட்டு அறிக்கை செய்துள்ளார்.
3. பிரதேச அபிவிருத்தி பதிய அமைச்சின் கீழ் அதிகார சபையின் பிரதித் தலைவர் ஆக 2016.10.11 ஆம் திகதி முதல் திரு லலிந்த நாகஹதென்ன அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
4. அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இரண்டாம் தர அடிபப்படையில் கடமையை மேற்கொண்டிருந்த இலங்கை நிர்வாக சேவவையின் உத்தியோகத்தரான திரு ஜே.சி.ரனேபுர அவர்கள் கண்டி மாவட்டத்தின் செயலாளர் பணிமனையில் வெற்றிடமாக காணப்பட்ட மேலதிக செயலாளர் (காணி) பதவியின் பொருட்டு 2016.02.24 ஆம் திகதி முதல் நீங்கிச் சென்றுள்ளார்.
5. இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தரான திருமதி ஏ.எம்.சீ.கே. அத்தபத்து பிரதிப் பணிப்பளாரள் (நிர்வாகம்) பதவியில் கடமையை மேற்கொண்டதுடன், அப்பதவியில் கடமை புரிந்து வந்ததோடு, வெற்றிடமாக காணப்படட நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியின் கடமையையும் அவரே புரிந்து வந்தார். இரண்டாந்தர அடிப்படையில் இந்த அதிகார சபைக்கு கடமையின் பொருட்டு வருகை தந்திருந்த பிரதிப் பணிப்பாளர் அவர்களும் 2016.06.03 ஆம் திகதி மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள கைத்திறன் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியின் பொருட்டு நீங்கிச் சென்றுள்ளார்.
6. அதிகார சபையின் வெற்றிடமாக இருந்த நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவியின் பொருட்டு மத்திய மாகாண சிறுவர் பராமரிப்பு காப்பறுதி சேவை திணைக்களத்தின் ஆணையாளராக கடமை மேற்கொண்ட இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தரான திரமதி குமுதினி எஸ். பிரேமச்சந்திரா 2016.06.02 ஆம் திகதி முதல் அதிகார சபையின் பதில் கடமை புரியும் நிறைவேற்றுப் பணிப்பாளராக (நிர்வாகம்) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
7. அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவியில் திரு டீ.எம்.ஏ.பி.தசநாயக்க அவர்களும், உதவிப் பணிப்பாளர் (கருத்திட்ட மற்றும் திட்டமிடல்) பதவியில் திரு பீ.டீ.எஸ்.டப்லியு. குமார அவர்களும், உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவியில் திரு ஏ.எம்.வசந்த பண்டார திலகரத்ன அவர்களும் 2016 ஆம் ஆண்டு கடமையை பொறுப்பெற்று வந்தார்.
8. அதிகார சபையின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற சந்தைப்படுத்தல் கருத்திட்டத்தின் உதவிப் பணிப்பாளராக இந்துனில் கே.வெலிகமகே அவர்கள் 2016 ஆம் ஆண்டு கடமை மேற்கொண்டார்.

## 03. நிறுவனத்திற்குச் சொந்தமான பௌதீக வளங்கள் -

கட்டடம் -

1. அதிகார சபையின் பணிமனையை நடாத்திச் செல்கின்ற 46 பேர்ச்சஸ் நிலத்தின் அறைவாசியும்
2. பல்லேகலை பண்ணையை நடாத்திச் செல்கின்ற 08 ஏக்கர் நிலமும்
3. கொத்மலை பண்ணையை நடாத்திச் செல்லப்படுகின்ற 05 ஏக்கர் காணியும்,
4. பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் 40 பேர்ச்சஸ் காணியின் அறைவாசியில் அமையப் பெற்றுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தளம் கட்டடம் மற்றும் காணி,
5. கண்ணொறுவை தோட்ட விஞ்ஞான பண்ணைக்கு அருகாமையில் அமைந்துள்ள கட்டடம் மறறும் காணி 80 பேர்ச்சஸ் அளவிலான பகுதி அதிகார சபைக்கு உரியதாக உள்ளது.

வாகனம் -

2016 ஆம் ஆண்டாகின்ற போது அதிகார சபைக்கு உரிய 11 கெப் வாகனமும். 01 கார், 01 பெஜ்ரோ வாகனம், 01 பெரிய லொறி மற்றும் சிறிய லொரி 01 உம் நிறுவனத்திற்கு உரித்தான 02 மோட்டார் சைக்கில்களும், கள உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 20 மோட்டார் சைக்கில்களும் உள்ளன. பண்ணைகள் பொருட்டு 03 டெக்டர்களும், ஆயுதப் படை முகாம் இற்கு (02 சில்லு) டெக்டர் 03 வழங்கப்பட்டுள்ளன. சந்தைப்படுத்தல் கருத்திட்டத்திற்கு உரிய லொரி 01 மற்றும் பொலேரோ லொரி 01 உம் ஆக மொத்தமாக 45 வாகனங்கள் உள்ளன.

## *இலங்கை ஹதபிம அதிகாரசபை*

## 2016 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபை ஒன்றுகூடல் இடம் பெற்ற திகதிகள்

| இல | பணிப்பாளர் சபை | பணிப்பாளர் சபை ஒன்றுகூடல் இடம் பெற்ற திகதிகளும் பங்குபற்றியோரும் | |
|---|---|---|---|
| | | 22.01.2016 | 18.02.2016 |
| 1 | திரு நந்தசேன ஹேரத், தலைவர். இலங்கை ஹதபிம அதிகார சபை | √ | √ |
| 2 | திரு பீ.அஜித் புஸ்பகுமார பிரதித் தலைவர் இலங்கை ஹதபிம அதிகார சபை | √ | 0 |
| 3 | பேராசிரியர் எச்.எம்.எஸ். ஹீன்கெந்த அமைச்சின் பிரதி நிதி பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | 0 |
| 4 | திரு எச்எம்.பி. ஹிடிசேகர – திறைசேரியின் பிரதி நிதி பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ |
| 5 | திருமதி சாந்தினி கோன்கஹகே பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ |
| 6 | திரு டீ.எம். சிறிசேன திசாநாயக்க பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ |
| 7 | திரு டீ.என்.டி நுகவெல - பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ |

| இல | பணிப்பாளர் சபை | பணிப்பாளர் சபை ஒன்றுகூடல் இடம் பெற்ற திகதிகளும் பங்குபற்றியோரும் | | |
|---|---|---|---|---|
| | | 31.102016 | 25.11.2016 | 29.12.2016 |
| 1 | திரு நந்தசேன ஹேரத், தலைவர். இலங்கை ஹதபிம அதிகார சபை | √ | √ | √ |
| 2 | திரு லலின்த நாகஹதென்ன பிரதித் தலைவர் இலங்கை ஹதபிம அதிகார சபை | √ | √ | √ |
| 3 | திரு எச்.எம்.பி. ஹிடிசேகர, திறைசேர பிரதிநிதி பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ | √ |
| 4 | திரு பீ.எச். ஆனந்த, அமைச்சின் பிரதி நிதி பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | 0 | √ |
| 5 | திரு கே.சன்திம பீரிஸ் - பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ | √ |
| 6 | திரு எல்.ஜி. கெமுனுடி சில்வா - பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ | √ |
| 7 | திரு உபாலி குணவர்த்தன பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | 0 | 0 |

வருகை தந்தோர் : √

வருகை தராதோர் : 0

2016 மார்ச் மாதம் ஹதபிம அதிகார சபையின் பிரதேச அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் புதிய அமைச்சரது நியமனத்தின் காரணமாக இருந்த பணிப்பாளர் சபையின் உத்தியோகபூர்வ காலம் முற்றுப் பெற்றதுடன் புதிய பணிப்பாளர் சபை 2016 ஒக்டோபர் மாதம் முதல் நியமிக்கப்பட்டது. அதற்கு அமைய ஜனவரி முதல் பெப்ரவரி வரை புதிய பணிப்பாளர் சபை நியமனத்தின் பின்னர் ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை 05 தடவைகள் ஒன்றுகூடின.

## இலங்கை ஹதபிம அதிகார சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியனியினர்

| தொ. இல | பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் |
|---|---|---|
| 1 | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 1 |
| 2 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 |
| 3 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 1 |
| 4 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (நிதி) | 1 |
| 5 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) | 1 |
| 6 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம் மற்றும் திட்டமிடல்) | 1 |
| 7 | நிர்வாக உத்தியோகத்தர் | 1 |
| 8 | நிதி உத்தியோகத்தர் | 1 |
| 9 | சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் | 1 |
| 10 | விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2 |
| 11 | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் | 1 |
| 12 | வலய உத்தியோகத்தர் | 12 |
| 13 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 |
| 14 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | 35 |
| 15 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுடபம் சாராத) | 19 |
| 16 | சிறாப்பர் | 1 |
| 17 | இயந்திர இயக்குனர் | 2 |
| 18 | ஒளி ஒலி உதவியாளர் | 1 |
| 19 | தொழில்நுட்ப உதவியாளர் | 2 |
| 20 | சாரதி | 14 |
| 21 | அலுவலக பணி உதவியாளர் | 4 |
| 22 | வாகன உதவியாளர் | 3 |
| 23 | காப்பாளர் | 4 |
| 24 | தொழிலாளி | 2 |
| 25 | பண்ணை தொழிலாளர் (பல்லேகலை மற்றம் கொத்மலை) | 13 |
| | **மொத்தம்.** | **125** |

## ஹதபிம அதிகாரசபை

## நிறுவன ஒழுங்கமைப்பு



## 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உரியவாறான ஒவ்வொரு கருத்திட்டத்தின் கீழும் உள்ள செயலாற்றுகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு

### 01 கிராமிய அபிவிருத்தி திட்டமிடல்

**i. ஆரம்ப பாதுகாப்பு திட்டமிடல்**

2016 ஆம் ஆண்டு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் பொருட்டு இலக்காகக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய இனங்காணப்பட்ட கிராமங்களில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பங்குபறச் செய்யும் பொருட்டு உரிய கிராமங்களினுள் உழவர் மக்களது பங்குபற்றுகையுடன் கள மட்டத்தில் இந்த வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. கிராமங்களினுள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி திட்டமிடல்கள் இணங்கண்டு இலக்காகக் கொண்ட காலப்பகுதியில் தயார் செய்வது இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் அத்துடன் 2016 ஆம் ஆண்டு முடிவடைகின்ற போது இந்த வேலைத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட செயலாற்றுகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.



பிரதேச செயலாளர் பிரிவு தெல்தோட்டை - 2016-02-02

| வேலைத்திட்டம் | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி. ரு,மி | பௌதீக | நிதி ரூ.மி. | பௌதீக | நிதி |
| ஆரம்ப பாதுகாப்பு திட்டமிடல் | கள வேலைத் திட்டங்கள் | 80 | 0.400 | 80 | 0.393 | 100% | 98% |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 10000 | | 8610 | | 86.1% | |





பிரதேச செயலாளர் பிரிவு தெல்தோட்டை - 2016-02-02

ii. **கிராமிய தலைமைத்துவ அபிவிருத்தி**

இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் கிராமிய மட்டத்தில் செயற்படுத்துவதன் பொருட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற கள முகாமையாளர்களது நடவடிக்கைகளின் பொருட்டு தேவையான உதவிக் குழுவை கட்டி எழுப்பும் பொருட்டு இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. கிராமங்களினுள் வாழ்கின்ற இளைஞர் யுவதிக் குழுக்களை இனங்கண்டு அவர்களின் பொருட்டு கிராமிய தலைமைத்துவம் மற்றும் பங்குபற்றுகையை அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் விஷேட பயிற்சி ஒன்றினை பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களை கிராமிய சமூக தலைவர்களாக சமூகமயப்படுத்தப்படுவர். 2016 ஆம் ஆண்டு இந்த வேலைத்திட்டம் ஊடாக அடையப் பெற்ற முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.





கிராமிய அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் பிலிமதலாவ - 2016-04-25

| வேலைத்திட்டம் | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி. ரு,மி | பௌதீக | நிதி ரூ.மி. | பௌதீக | நிதி |
| கிராமிய தலைமைத்துவ அபிவிருத்தி | பயிற்சி வேலைத் திட்டங்கள் | 10 | 0.750 | 10 | 0.664 | 100% | 89% |
| | சமூக தலைவர்களது எண்ணிக்கை | 400 | | 400 | | 100% | |





கிராமிய அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் பிலிமதலாவ - 2016-04-24

## 02. விடயவிதான பயிற்சி வேலைத்திட்டம்

இலக்காகக் கொண்ட கிராமங்களினுள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள மண்ணரிப்பு பாதுகாப்பு வேலைத் திட்டம் தொடர்பில் விவசாய மக்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை எடுத்துச் செல்வது இந்த வேலைத் திட்டத்தின் அரம்ப இலக்காகும். கள மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக மண்ணரிப்பு பாதுகாப்பு தொடர்பில் தலைமைத்துவ மற்றும் செயன்முறை பயிற்சி உழவர் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதற்கு அமைய 2016 ஆம் ஆண்டு இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறான முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளன.




பிரதேச செயலாளர் பிரிவு மல்லவபிடிய – கடுபிடிய தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு

| வேலைத்திட்டம் | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி. ரு,மி | பௌதீக | நிதி ரூ.மி. | பௌதீக | நிதி |
| விடயவிதான பயிற்சி வேலைத்திட்டம் | பயிற்சி வேலைத் திட்டங்கள் | 80 | 0.400 | 80 | 0.366 | 100 % | 92% |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை எண்ணிக்கை | 10000 | | 8324 | | 83 % | |




பிரதேச செயலாளர் பிரிவு மல்லவபடிய கடுபிடிய தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு

## 03. மண்ணரிப்பு பாதுகாப்பு மற்றும் நீர் வரப்பு முகாமை

### i. மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரியை ஸ்தாபித்தல்

விடயவிதான தொழில்நுட்ப பயிற்சி வேலைத் திட்டம் கள மட்டத்தில் செயற்படுத்துவதன் ஊடாக விவசாயிகள் மத்தியில் புதிய தொழில்நுட்பத்தை எடுத்துச் செல்வதுடன் அந்த சகல தொழில்நுட்பங்களையும் ஒருங்கிணைக்கப்பட்டு மாதிரிகள் தயார் செய்வதன் ஊடாக உழவர் மக்களை மிகவும் கூடிய அளவிலான செயன்முறையான ரீதியில் அறிவூட்டுவதற்கு இயலுமாக உள்ளது. அந்த அபிலாசைகளை இலக்காகக் கொண்டு சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் விஞ்ஞான ரீதியான மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரிகள் தயார் செய்வதன் பொருட்டு 2016 ஆம் ஆண்டு இலக்காகக் கொண்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக அடையப் பெற்ற முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.



பிரதேச செயலாளர் பிரிவு - வெலிமட



பிரதேச செயலாளர் பிரிவு - யடவத்தை

| வேலைத்திட்டம் | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி. ரு.மி | பௌதீக | நிதி ரூ.மி. | பௌதீக | நிதி |
| மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரி ஸ்தாபித்தல் | மாதிரி | 50 | 2.0 | 40 | 1.639 | 80 % | 82 % |

| மாவட்டம் | பி.செ.பிரிவு | தொ.இல. | மாதிரியின் பெயர் |
|---|---|---|---|
| கண்டி | தெல்தோட்டை | 1 | சுதுவெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு |
| | | 2 | கலஹா கமநல சேவை நிலையம் |
| | யடிநுவர | 3 | ஏதடுவாவ கமநல சேவை நிலையம் |
| | அக்குரனை | 4 | அலவதுகொடை கமநல சேவை நிலையம் |
| | ஹாரிஸ்பதுவ | 5 | யடியவாவல கமநல சேவை நிலையம் |
| | பூஜாபிடிய | 6 | வேவலை கமநல சேவை நிலையம் |
| | உடதும்பர | 7 | மீதொடடுஹேன மாதிரிக் கிராமம் |
| | பாத்தஹேவாஹெட்ட | 8 | தலாதுஓயா கமநல சேவை நிலைய வளாகம் |
| | தெல்தெனிய | 9 | மெதமஹநுவர கமநல சேவை நிலையம் |
| | பாத்ததும்பர | 10 | வித்தியா தர்சன பிரிவெனா – வத்தேகம |
| | | 11 | மிருக வைத்தியப் பணிமனை – வத்தேகம் |

| மாவட்டம் | பி.செ.பிரிவு | தொ.இல. | மாதிரியின் பெயர் |
|---|---|---|---|
| மாத்தளை | நாவுலை | 12 | கோன்கஹவெல கமநல சேவை நிலைய வளாகம் |
| | யடவத்தை | 13 | யடவத்தை கமநல சேவை நிலைய வளாகம் |
| | வில்கமுவ | 14 | ஹெட்டிபொலை கமநல சேவை நிலைய வளாகம் |
| | லக்கல பல்லேகம் | 15 | இலுக்கும்புர கமநல சேவை நிலைய வளாகம் |
| | அம்பன்கத கோரலை | 16 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | உகுவலை | 17 | கமநல சேவை நிலைய வளாகம் |
| | மாத்தலை | 18 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | பல்லேபொலை | 19 | பல்லேபொலை கமநல சேவை நிலைய வளாகம் |
| | ரத்தோட்டை | 20 | வெரகம கமநல சேவை நிலைய வளாகம் |
| | கலேவலை | 21 | வாசலகோட்டே கமநல சேவை நிலைய வளாகம் |
| நுவரெலியா | கொத்மலை | 22 | மல்தெனிய கமநல சேவை நிலைய வளாகம் |
| | அம்பகமுவ | 23 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | ஹங்குரன்கெத | 24 | மன்தாரம்நுவர கமநல சேவை நிலைய வளாகம் |
| | | 25 | போகமுவ பசுமைத் தோட்ட கட்டடத்துடனான வளாகம் |
| | | 26 | ரிகில்லகஸ்கட கமநல சேவை நிலைய வளாகம் |
| குருணாகலை | ரிதிகம | 27 | தொடம்கஸ்லந்த கமநல சேவை நிலைய வளாகம் |
| | வல்லவபிடிய | 28 | குரு/வேரவெல்ல கமநல சேவை நிலைய வளாகம் |
| கேகாலை | கேகாலை | 29 | பரகம்மான கமநல சேவை நிலைய வளாகம் |
| | அரநாயக்க | 30 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | தெஹியோவிட்ட | 31 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | யடியன்தொட்டை | 32 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| பதுலை | ரிதிமாலியத்தை | 33 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | ஊவாபரணகம | 34 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | வெலிமடை | 35 | பொரலந்த பொலிஸ் நிலையம் |
| | மீகஹகிவுல | 36 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| இரத்தினபுரி | குருவிட்ட | 37 | பிரதேச செயலாளர் பணிமனை வளாகம் |
| | எலபாத | 38 | கமநல சேவை நிலைய வளாகம |
| | எஹலியகொடை | 39 | ர/தர்மபாலல பாடசாலை வளாகம். |
| | கிரிஎல்ல | 40 | கமநல சேவை நிலைய வளாகம |

## ii. "மாணவ அறிவு காப்பறன்" பாடசாலை சூழல் வேலைத் திட்டம்

சூழல் பாதுகாப்பு இயற்கை வளம் நிலையான முகாமைத்துவம் செய்யும் பொருட்டு மற்றும் இயற்கை அணர்த்த நிலமைகளை குறைத்துக் கொள்வது தொடர்பில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் புதிய அறிவு மற்றும் எண்ணக்கரு அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு இந்த வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இணங்காணப்பட்ட சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒரு பாடசாலை இவ்வேலைத் திட்டத்தின் பொருட்டு பங்குபெறச் செய்யப்படுகின்றன. மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் தலைமைத்துவ பயிற்சி வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் பாடசாலை பூமியில் மண்ணரிப்பு பாதுகாப்பு மற்றும் சூழல் மாதிரிகளாக அபிவிருத்தி செய்யப்படும். அதற்கு அமைய 2016 ஆம் ஆண்டு இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக அடையப் பெற்ற முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| வேலைத்திட்டம் | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி. ரு,மி | பௌதீக | நிதி ரூ.மி. | பௌதீக | நிதி |
| "மாணவ அறிவு காப்பறன்" பாடசாலை சூழல் வேலைத் திட்டம் | பாடசாலை | 50 | 2.0 | 44 | 1.883 | 88 % | 94% |
| | மாணவர் | 5000 | | 5350 | | | |



பிரதேச செயலாளர் பிரிவு – யடவத்தை



பிரதேச செயலாளர் பிரிவு – மாவத்தகம

| மாவட்டம் | பி.செ.பிரிவு | தொ.இல. | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|
| கண்டி | பாத்தஹேவாஹெட்ட | 1 | க/போபிடிய ராஜசிங்க தே.பா. |
| | தெல்தோட்டை | 2 | க/போபிடிய தமிழ் வித்தியாலயம் |
| | தெல்தெனிய | 3 | க/உடிஸ்பத்துவ ம.வி. |
| | அக்குரனை | 4 | ம.மா/கடு/திப்பிடிய இரண்டாம்தர பாடசாலை |
| | பாத்தஹேவாஹெட்ட | 5 | ம.மா/க/தலாதுஓயா க.வி. |
| | பூஜாபிடிய | 6 | ம.மா/கடு/பூ/கிரிவான கெடிய க.வி. |
| | யடிநுவர | 7 | ம.மா/தெ/கொப்பேகடுவ வி. |
| | ஹாரிஸ்பத்துவ | 8 | ம.மா/கடு/சிறி சுமனதிஸ்ஸ க.வி. |
| | பாததும்பர | 9 | ம.மா/வத்/வத்தேகம ம.வி. |
| | கங்கவட்ட கோரலை | 10 | ம.மா/சிறி ராஹுல வித் |

| மாவட்டம் | பி.செ.பிரிவு | தொ.இல. | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|
| மாத்தளை | நாவுலை | 11 | மா/நா/கோன்கஹவெல ம.வி. |
| | வில்கமுவ | 12 | ம.மா/வில்/நுககொல்லை ம.வி. |
| | லக்கல பல்லேகம் | 13 | மா/வில்/மஹலகொடுவ ம.வி |
| | ரத்தோட்டை | 14 | மா/ரத்/வேரகம சிறி சீவலி ம.வி. |
| | அம்பன்கத கோரலை | 15 | ம.மா/நா/மஹிந்த இரண்டாம்தர பாடசாலை |
| | உகுவலை | 16 | க/தென்ன ம.வி. |
| | மாத்தலை | 17 | மா/அலுவிஹார ம.வி. |
| | பல்லேபொலை | 18 | ம.மா/க/மில்வான ம.வி. |
| | யடவத்தை | 19 | மா/அநகாரிக தர்மபால வி. |
| | தம்புல்லை | 20 | ம.மா/க/எதாபெதிவெவ க.வி. |
| | கலேவலை | 21 | ம.மா/க/தலகிரியாகம ம.வி. |
| நுவரெலியா | கொத்மலை | 22 | ம.மா/கொ/சிரி சமன் ம.வி. |
| | அம்பகமுவ | 23 | ம.மா/ஹெ/தெஹிகஸ்தென்ன வி. |
| | வலபனை | 24 | ம.மா/வ/சிரி சிதுஹன் ம.வி. |
| | | 25 | ராகலை மன்திரிதென்ன ம.வி. |
| குருணாகலை | ரிதிகம | 26 | வ/இ/ரி/ஈரியகொல்ல ம.வி. |
| | மாவத்தகம | 27 | கு/மீதென்ன வலை ம.வி. |
| | வல்லவபிடிய | 28 | கு/கொஸ்கொல்ல க.வி. |
| கேகாலை | கேகாலை | 29 | கே/மாபோபிடிய ம.வி. |
| | அரநாயக்க | 30 | கே/மா/கம்துன உடகம க.வி. |
| | தெஹியோவிட்ட | 31 | கே/தெ/ரன்ஜன் விஜேரத்ன வி. |
| | யடியன்தொட்டை | 32 | கே/தெ/இஹலகம்மெத்த க.வி. |
| | புலத்கொஹுபிடிய | 33 | கே/தெ/வேகல்ல க.வி. |
| பதுலை | ரிதிமாலியத்தை | 34 | ப/மஹமெதகம ம.வி. |
| | ஊவாபரணகம | 35 | ப/கரகஹ உல்பத சிறிஞானந்த வி. |
| | வெலிமடை | 36 | ப/போகஹகும்புர ம.வி. |
| | மீகஹகிவுல | 37 | ப/பலகொல்லை வி. |
| இரத்தினபுரி | குருவிட்ட | 38 | ர/சதாகல ராஹுல ம.வி. |
| | எலபாத | 39 | ர/நி/தம்ர்லுவன வி. |
| | எஹலியகொடை | 40 | ர/மாபொட வி. |
| | கிரிஎல்ல | 41 | ர/எல்லகாவ வி. |
| பொலன்னறுவை | மெதிரிகிரிய | 42 | பொ/திவுலன்கடவல ம.ம.வி. |
| | | 43 | பொ/விஜயராஜ்.ம.வி. |
| | திம்புலாகலை | 44 | பொ/தி/விலயாய |

### iii. நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு

சூழல் ரீதியில் மிகவும் கூடிய வகையில் உணரக்கூடிய நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகள் முறையற்ற மனித செயற்பாடுகள் காரணமாக அழிவுக்குட்படுத்தப்பட்டு வருகின்ற பயங்கரமான நிலமையாகும். இந்தக் காரணமாக அந்த பிரதேசங்களில் நீர் மூலங்களில் அழிவுக்குட்படுத்தப்பட்டு வருவதுடன் குடி நீரை வழங்குவதன் பொருட்டும் கூட முடியாத நிலமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளன. இந்த நிலமையை குறைத்துக் கொள்வதன் பொருட்டு இனங்காணப்பட்ட நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகளை பாதுகாத்துக் கொள்வதன் பொருட்டு காலத்திற்குத் தேவையான வேலைத் திட்டங்கள் 2016 ஆம் ஆண்டு அதிகார சபையினால் செயற்படுத்தப்படுகின்றது. இந்த வேலைத் திட்டங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட செயலாற்றகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

பிரதேச செயலாளர் பிரிவு – மாவத்தகம



நிர்மானிப்பதற்கு முன்னர்



நிர்மானிப்பத்த பின்னர்

2016-10-17

| வேலைத்திட்டம் | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | சதவீதம் | |
| 276,877.10 | அம்பாறை விற்பனை நிலையம் | - | 7,056.00 | 7,056.00 | - |
| 1,035,653.00 | | 2,245,670.56 | - | 2,245,670.56 | - |
| 539,956.00 | கொள்வனவு கட்டுப்பாட்டுக் கணக்கு | - | - | - | |
| 3,500.00 | | - | - | 118,137.50 | |
| 23,000.00 | வைத்திருப்பு | 72,663.00 | - | - | 72,663.00 |
| 22,412.59 | ஹதபிம பதவியனியினர் கடன் | - | - | - | - |
| | நலனோம்பல் | 821,485.20 | 1,665.69 | 823,150.83 | - |
| | செலுத்தப்படாத சம்பளம்/மேலதிகநேரம் | 5,627.27 | - | 5,627.27 | - |
| | வர்த்தக கடன்கள் | 290,738.48 | - | 290,738.48 | - |
| | விற்பனை நிலையம் கண்ணொறுவை | - | 106,818.00 | 106,818.00 | - |
| | பாதுகாப்பு வைப்புத் தொகை | - | 13,429.67 | 13,429.67 | - |
| **1,901,398.69** | மொத்தம் | **3,436,184.51** | **128,969.36** | **3,492,490.87** | **72,663.00** |



## உறப்படும் செலவுகள்

| கணக்கு குறியீடு | விபரம் | | | தொகை |
|---|---|---|---|---|
| 1404-J | சுத்திகரிப்பு சேவை | 24,000.00 | - | 24,000.00 |
| 1401-A | அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 41,975.00 | - | 41,975.00 |
| 1404 | தொலைபேசி | 2,783.42 | 988.23 | 3,771.65 |
| 1404-C | நீர் | 8,595.69 | 1,140.08 | 9,735.77 |
| 1404-B | மின்சாரம் | 18,485.88 | 1,100.00 | 19,585.98 |
| 1401 | வாகன பராமரிப்பு | 33,800.00 | - | 33,800.00 |
| 1201 | போக்குவரத்து மறறும் ஏனைய | 19,859.00 | - | 19,859.00 |
| 1404-D | எரிபொருள் | 41,695.00 | - | 41,695.00 |
| 1404- A | தபால் செலவு | - | 147.0 | 147.0 |
| 1102 | மேலதிக நேரம் | 42,507.04 | 4,833.60 | 47,340.64 |
| 1101-C | ஊழியர் நம்பிக்கை நிதி | 16,284.33 | 506.70 | 16,791.03 |
| 1101-B | ஊழியர் சேமலாப நிதி | 66,414.92 | 2,026.80 | 68,441.72 |
| 1101 | வேதனம் | 625,767.33 | 19,390.00 | 645,157.33 |
| 1309-A | வங்கி அறவீடுகள் | 306.01 | - | 306.01 |
| 1309-E | பதவியனியினர் நலனோம்பல் | 27,375.00 | - | 27,375.00 |
| 1404- D | வாகன காப்புறுதி | 2,050.80 | - | 2,050.80 |
| | மொத்தம் | **968,899.42** | **30,132.51** | **999,031.93** |

தலைமை பணிமனை
பட்டியல் 01

# இலங்கை ஹதபிம அதிகார சபை

## திறைசேறி மற்றும் அமைச்சின் நிதி – 31.12.2016

| | | ரூபா |
|---|---|---|
| **திறைசேறி நிதி** | | |
| | மீண்டுவரும் | 61,190,000.00 |
| கழி : | மூலதன நிதிக்கு மாற்றல் | (2,189,749.43) |
| | | **59,000,250.57** |
| | மூலதன | 56,672,000.00 |
| கூட்டு : | மீண்டுவரும் நிதியில் இருந்த மாற்றல் | 2,189,749.43 |
| | மொத்தம் | **58,861,749.43** |

தலைமை பணிமனை
பட்டியல் 02

### ஏனைய வருமானங்கள்

| கணக்கு குறியீடு | விபரம் | தொகை 2016 |
|---|---|---|
| 3001 | வாடகை | 7,500.00 |
| | வட்டி | 1,881,000.00 |
| 3007 | கடன் வட்டி | 495,793.68 |
| 3004 | மேலதிகம் | 2,400.00 |
| 3009 | பல்வேறுவகையான வருமானம் | 222,901.00 |
| 3003 | வழங்கள் பதிவுக் கட்டணம் | 25,500.00 |
| | மாடுகளின் மேலதிகம் | 12,183.00 |
| | பணிமனை வாகன பெறுகை | 8,200.00 |
| | சுழல் நிதி வட்டி | 60,474.95 |
| | ஏழு நாட்களுக்கான FD வட்டி | 266,208.56 |
| | மொத்தம் | **2,982,161.19** |

விற்பனை பகுதி
பட்டியல் 02

### ஏனைய வருமானங்கள்

| விபரம் | தொகை |
|---|---|
| பதிவுக் கட்டணம் | 36,400.00 |
| பல்வேறு வருமானங்கள் | 491,350.96 |
| வட்டி வருமானம் | 899,500.31 |
| போக்குரத்து அறவீடுகள் | 12,555.00 |
| மொத்தம் | **1,439,806.27** |

# சந்தைப்படுத்தல் கருத்திட்டம்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } சீஎல்பீ-எல்/கேடீ/எச்/எச்ஏ/1/16/2017/35

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 செப்தெம்பர் 30

தலைவர்,

இலங்கை ஹதபிம அதிகாரசபை

**இலங்கை ஹதபிம அதிகார சபையின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஹதபிம அதிகார சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் கூற்றுக்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை அதிகார சபையின் தலைவருக்கு 2017 யூலை 17 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ஹதபிம அதிகார சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைப் புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தரு காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 5,679,700 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளானபோதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, உருவாகிய மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தஞ் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்தப்பட ஆரம்பித்த தினத்திலிருந்தே தேய்மானமும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு

முரணான சொத்துத் தேய்மானக் கொள்கையையே அதிகார சபை கடைப்பிடித்திருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் ரூபா 6,788,124 பெறுமதியான கையிருப்பைப் பெறுமதியிட்ட அடிப்படையும் கையிருப்பு சம்பந்தமாகப் பயன்படுத்திய கிரயச் சூத்திரமும் உள்ளடங்கலாக கையிருப்பை அளவிடுகையில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை அதிகாரசபை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய சம்பளமாகிய ரூபா 2,999,102 , ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 89,973 , ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 359,892 என்பன குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) கணிப்பீட்டு வழுவின் காரணமாக ரூபா 270,527 பணிக்கொடைச் செலவினம் மற்றும் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு என்பன மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) 2017 சனவரி 17 அன்று இரத்துச் செய்யப்பட்ட ரூபா 5,000,000 பெறுமதியான ஊடக வைப்பானது நிதிக்கூற்றுத் தயாரிப்பின்போது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட்டதாகக் கருத்திற் கொள்ளப்பட்டு காசேட்டில் வரவு வைக்கப்பட்டமையால் அதேயளவு தொகையால் முதலீடுகள் குறைவாகவும் வங்கி மற்றும் காசு மீதி என்பன அதேயளவு அதிகரித்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) அதிகாரசபைக்குரிய ரூபா 5,000,000 பெறுமதியான நிலையான வைப்புக்குரிய 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டி ரூபா 105,548 ஆகும். இது கணக்கிலிடப்படவில்லை.

2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்குக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 228,550 | உரித்து மற்றும் கட்டிடங்கள் உள்ளதை உறுதி செய்தற்குத் தேவையான ஆவணங்கள் |
| பெற வேண்டிய மீதி | 287,188 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| செலுத்த வேண்டிய மீதி | 595,488 | |

2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

அதிகாரசபை மற்றும் விற்பனைப் பிரிவின் மூலம் பேணப்படும் கணக்குகளுக்கும் பட்டோலைகளுக்குமிடையே 04 சந்தர்ப்பங்களில் ரூபா 398,476 வேறுபாடு நிலவியது.

2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 219,232 பெறுமதியான 37 பெற வேண்டிய மீதிகள் தீர்த்து வைக்கப்படாதிருந்தன. அவை 01 முதல் 07 ஆண்டு காலம் வரையிலானவை.

(ஆ) ஓராண்டிற்கு மேலாக 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாதிருக்கும் 06 ஊழியர் கடன் மீதிகளான ரூபா 115,562 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) அதிகார சபையின் சேவையிலிருந்து நீங்கிய உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடனாகிய ரூபா 239,533

குறித்த உத்தியோகத்தரிடமிருந்தோ அல்லது பிணையாளியிடமிருந்தோ அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய 04 மீதிகளாகிய ரூபா 609,727 தீர்த்து வைக்கப்படாதிருந்தன. அவை 01 முதல் 10 ஆண்டு வரையிலானவை.

(உ) மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்த 2014 முதல் தொடர்ந்து வரும் இனங்காணா "பதவியணிக்கடன் சீராக்கல்"கணக்கில் இருந்த ரூபா 50,998 மீதியானது 2017 ஆகஸ்ட் மாதமளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் டிசெம்பர் மாதத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 06 மாதங்களுக்கு மேற்பட்டதும், வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருப்பதுமான ரூபா 775,500 பெறுமதியான 207 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | நிறுவனத்தில் கையடையாள இயந்திரம் ஒன்று செயற்பட்டவாறிருந்த போதும், கையடையாள இயந்திரத்திலிருந்து பெறப்பட்ட பிரதி ஒன்றில் வருகை தரும் நேரமும் செல்லும் நேரமும் உறுதி செய்யப்படாது உத்தியோகத்தர்களது கட்டுப்பாட்டின் கீழிருந்த வரவு இடாப்பினது |

| | |
|---|---|
| | அடிப்படையில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாகவும் விடுமுறை தினச் சம்பளமாகவும் ரூபா 1,817,943 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கை | (i) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்த்து வைக்கப்படாதிருந்த பணி நிமித்தக் கட்டு நிதி மீதி ரூபா 607,984 ஆகும். அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) நிறுவன உத்தியோகத்தர்களால் 2016 ஆம் ஆண்டின்போது 30 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 261,120 முற்பணமானது குறித்த வேலை நிறைவேறி 14 முதல் 262 நாட் தாமதத்துடன் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. |
| | (iii) முற்பணமாக 27 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 365,280 ஆகும். இதில் ரூபா 226,070 பயன்படுத்தப்படாது திருப்பியளிக்கப்பட்டிருந்தன. அவை 28 முதல் 100 சதவீதம் வரையிலானவை. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | ஆண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2.5 போதிய அதிகார உறுதிப்படுத்தலற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 செப்டம்பர் 22 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/ஈஜ/14/05/115 (VOL 1) இலக்கக் கடிதத்தின் பிரகாரம் வினைத்திறனுக்கான படியை வழங்குவதற்குப் பொருத்தமான விதிமுறைகளைத் தயாரித்து அவற்றை மீண்டும் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்திருந்தபோதும், 2017 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினது அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாது வினைத்திறனுக்கான படியாக 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 619,440 வினைத்திறன் படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) விற்பனைப் பிரிவின் ஊழியர்கள் இடர்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் செலவுகளை மேற்கொள்வதன் பொருட்டு உருவாக்கப்பட்ட இடர் ஒதுக்க நிதியத்திற்கு 2011 செப்டம்பர் முதல் 2016 டிசெம்பர் 31 வரை நிறுவன நிதியிலிருந்து செலவு வைக்கப்பட்ட ரூபா 469,457 மற்றும் மேலும் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 37,000 என மொத்தமாக ரூபா 506,457 தொடர்பாக விதிமுறைகளையும் நிர்ணயங்களையும் தயாரித்துத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது அதிகார சபையின் நிதிப் பெறுபேறானது ரூபா 1,359,802 மிகையாக அமைந்ததுடன், அதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 798,108 ஆகவும் அமைந்திருந்தது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறுகளில் ரூபா 561,694 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் திறைசேரியின் மீண்டுவரும் பெறுவனவுகள் ரூபா 1,639,421 அதிகரித்தமையானது மேற்படி அதிகரிப்பிற்கான பிரதான காரணியாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 32,601,898 ஆகவிருந்த பற்றாக்குறை 2013 ஆம் ஆண்டில் ரூபா 23,704,832 மிகையாகியிருந்தது. 2014 முதல் 2016 வரை மிகை அவதானிக்கப்பட்டபோதும், 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அம் மிகையில் குறைவு அவதானிக்கப்பட்டது. நிதிக்கூற்றில் ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பொருட்டான சீருாக்கலுக்குட்பட்டபோது தேய்மானம் மீண்டும் சீராக்கலுக்குட்பட்டபோது 2012 ஆம் ஆண்டின் பங்களிப்பாகிய ரூபா 9,746,179 தொகையானது 2016 ஆம் ஆண்டின்போது மாற்றங்களுக்குள்ளாகி ரூபா 72,492,946 ஆகியிருந்தது.

## 3.2 அதிகாரசபைக்கு எதிராகவும் அதிகாரசபையாலும் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்.

வெளி நபர்களால் அதிகாரசபைக்கு எதிராக 04 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அதிகாரசபையினது வளங்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பாக ரூபா 40,178 அறவிடுவதன் பொருட்டு அதிகாரசபையால் முன்னாள் ஊழியர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்.

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

(அ) கமத்தொழிலை பல்வகைப்படுத்தல், ஜனாவாச அபிவிருத்தி மற்றும் பூரண தொடர்புடைய வரப்பு முகாமைத்துவத்திற்கான திட்டத்தை தயாரித்தலும் அமைச்சரால் அவ்வவ்போது நிச்சயிக்கப்படும் பிரதேசங்களில் கூட்டுத்தாபனம் அல்லது அரசு அல்லது அரச சார்பற்ற நிறுவனத்தினால் அத்திட்டத்தை ஒருங்கிணைத்து செயற்படுத்தலும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் உடமையாக்கப்படும் அல்லது சுவீகரிக்கப்படும் சகலகாணிகள், அதியுயர் விளைச்சல், சுற்றாடல் பாதுகாப்பு, காணி மற்றும் நீர் வளப் பாதுகாப்பு மற்றும் ஜனாவாச அபிவிருத்தியை உறுதி செய்யும் நோக்குடன் முகாமைத்துவத்தில் ஈடுபடுத்தல்.

(இ) கமத்தொழில் உற்பத்திகளைத் தயாரித்தலும் விற்பனை செய்தலும்.

(ஈ) கமத்தொழிலை பல்வகைப்படுத்தல் மற்றும் ஜனாவாச அபிவிருத்தி என்பவற்றுக்காக பொறித் தொகுதி, உபகரணங்கள் மற்றும் இயந்திர சாதனங்களை நிறுவுதல், அவற்றைப் பராமரித்தல் மற்றும் செயற்படுத்தல் என்பன.

(உ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு நிச்சயிக்கப்படும் பிரதேசங்களில் கமத்தொழிலை பல்வகைப்படுத்தல், ஜனாவாச அபிவிருத்தி மற்றும் வரப்பு முகாமைத்துவம் என்பவற்றைச் செயற்படுத்தவதற்குத் தேவையெனக் கருதும் சகல நடவடிக்கைகளையும் அமுலாக்குதல்.

இந்நோக்கத்தை ஈடேற்றுதல் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கமத்தொழிலை பல்வகைப்படுத்தல், ஜனாவாச அபிவிருத்தி, கமத்தொழில் உற்பத்தித் தயாரிப்பு ஆகிய நடவடிக்கைகள் ஆண்டின் போது நடைபெறவில்லை.

(ii) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 57,650,130 திறைசேரியால் வழங்கப்பட்டபோதும், அதற்கு மேலதிகமாக ரூபா 5,588,163 நிறுவனத்தாலும் பயன்படுத்தப்பட்டு மண் பாதுகாப்பு நடவடிக்கைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு கவனம் செலுத்தப்படவில்லை.

(iii) திட்டமிடல் மற்றும் செயல் முன்னேற்ற மீளாய்வின் பொருட்டு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 350,000 ஆகும். இதில் ரூபா 101,144 அல்லது 29 சதவீத பணிகள் மாத்திரமே நடைபெற்றிருந்தன.

(iv) ஒட்டுமொத்த இலக்கு மற்றும் ஒட்டு மொத்த செயல் முன்னேற்றம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளுமிடத்து அதியுயர் செயல் முன்னேற்றம் தென்பட்டபோதும், 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 584.64 ஹெக்டயரில் மண் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 முதல் நிலவிவரும் 03 கணக்கு களுக்குரிய ரூபா 2,081,413 ஒதுக்க மீதி எந்தநோக்கத்துடன் பேணப்படுகின்றது என்பதை கணக்காய்விற்கு தெரிவிக்கவில்லை.

(ஆ) விற்பனைக் கூடங்களில் நாளாந்தம் சேகரிக்கப்படும் பணம் உடனடியாக வங்கியிலிடப்பட வேண்டுமாயினும், 2016 டிசெம்பர் 30 முதல் 2017 சனவரி 10 வரை 12 சந்தர்ப்பங்களில் ரூபா 162,425 மற்றும் ரூபா 1,111,401 வரையிலான பணம் கையில் இருந்ததுடன், சில்லறைச் செலவினங்களுக்குச் செலவிடுவதன் பொருட்டு சில்லறைக் காசுக் கட்டு நிதியாக வைத்திருக்க வேண்டிய தொகையினது வரம்பும் முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சிறுவர்களது; பெற்றோர்களது சிரமதானத்துடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தபோதும், அதற்கு விதிவிலக்காக 40 பாடசாலைகளில் தயாரிக்கப்பட்ட மாதிரிகளுக்கு ரூபா 641,209 மற்றும் 11 மண் மாதிரிகளுக்குக் கூலியாக ரூபா 178,910 என வெளி நபர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) விற்பனைக் கூடங்களை வந்தடையாத காய்கறி வகைகளுக்கு 2014, 2015 ஆம் ஆண்டுகளில் அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,739,764 கூட்டுத் தொகையின் பொருட்டு பொறுப்பான நபர்களிடமிருந்து ரூபா 575,000 மாத்திரமே அறவிடப்பட்டு எஞ்சிய ரூபா 1,164,764 அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(உ) அதிகாரசபையின் உத்தியோகத்தர் ஒருவர் வசித்த அரச மனை வேறு அமைச்சொன்றிற்கு உரியபோதும் அதனை முறைப்படி சுவீகரித்திருக்க வில்லை.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கன்னொறுவ மற்றும் அம்பாறை விற்பனைக் கூடங்களில் கொள்வனவுகளுக்கு ஒப்பான கழிவுகளது பெறுமதி முறையே ரூபா 1,899,383 அல்லது 2.3 சதவீதம் மற்றும் ரூபா 302,418 அல்லது 17.8 சதவீதமாக இருந்தன. கன்னொறுவ விற்பனைக் கூடத்துடன் ஒப்பிடுகையில் அம்பாறை விற்பனைக் கூடத்தின் கழிவு மிகவும் கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) பல்லேகல மற்றும் கொத்மலை விவசாயப் பண்ணைகளில் 2015 ஆம் ஆண்டின்போது முறையே ரூபா 1,326,129 மற்றும் ரூபா 74,999 ஆகவும் 2016 ஆம் ஆண்டின்போது முறையே ரூபா 219,382 மற்றும் ரூபா 153,649 ஆகவும் நட்டம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சினது செயலாளரின் 2015 மார்ச் 04 ஆந் திகதிய 04/04/07 இலக்கக் கடிதத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் விவசாயத் திட்டம் ஒன்றை தயாரித்து விவசாயப் பண்ணைகளது இலாபத்தை உருவாக்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை.

4.4 **பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு செயற்திட்டங்களுக்கென கொள்வனவு செய்யப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்தனவாக இருந்த ரூபா 716,170 பெறுமதியான விவசாய உபகரணங்கள் 2017 சனவரி 05 ஆந் திகதியளவிலும் களஞ்சியத்தில் இருந்தன.

(ஆ) ஏறக்குறைய 10 ஏக்கரிலான பல்லேகல விவசாயப் பண்ணைக்கு உரித்தான காணி முழுவதும் பயனுள்ளவாறு உபயோகப்படுத்தப்படவில்லை.

(இ) வெலிகம விற்பனைக் கூடத்திற்கு ரூபா 124,707 பெறுமதியான பொருட்கள் 2016 நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், 2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் வெலிகம விற்பனைக் கூடத்தை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அப்பொருட்கள் பயனற்றும் இருந்தன.

(ஈ) 2014 ஆம் ஆண்டு அபிவிருத்திச் செலவினத் தலைப்பிலிருந்து ரூபா 5,442,792 செலவழிக்கப்பட்டு அரைவாசி பூர்த்தியாகிய இங்கிரிய விற்பனைக் கூடக் கட்டிடம் கணக்காய்வுத் தினமான 2017 சனவரி 31 ஆந் திகதியளவிலும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டுப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

## 4.5 ஒப்பந்தம் மற்றும் பொருட் கொள்வனவு நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) இங்கிரிய விற்பனைக் கூடம்

(i) நிறைவேற்றப்படாத 04 வேலைகளுக்கு ரூபா 105,100 ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2006 தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 04 ஆம் அத்தியாயத்தின் 4.1.1 (இ) வழிகாட்டலின் பிரகாரம், நிதியேற்பாடு இருப்பதை உறுதி செய்யாது ரூபா 1,223,499 பெறுமதியான விற்பனை நிலையக் கழிவறைகளை நிர்மாணிக்கும் வேலை 2014 ஆகஸ்ட் 07 அன்று ஆரம்பமாகி அரைவாசி நிறைவேறியபோதும், பணமின்மையால் 2017 யூன் மாதமளவிலும் நிர்மான வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(iii) காய்கறி வகைகள் மற்றும் பொருட்களை விற்பனை செய்வதற்கென நிர்மாணிக்கப்பட்ட விற்பனைக் கூடத்தின் நிர்மாண வேலை நடவடிக்கைகளின் 09 ஆம் கட்டத்தின் கீழ் ரூபா 16,570,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அது அங்கீகரிக்கப்பட்டபோதும், மேலும் தேவைப்படும் ரூபா 10,570,164 நிதியை பெற்றுக்கொள்வதற்கு திட்டம் தயாரிக்கப்படாதிருந்தது.

(iv) விற்பனைகூடத்தின் 04 ஆம் கட்ட நிர்மான வேலைக்கு ரூபா 6,478,698 கூட்டுத்தொகைக்கான மதிப்பீடு செய்யப்பட்டு, 3 ஆம் கட்ட வேலைகளுக்கு மாத்திரமே கூறு விலைகள் கோரப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரேயொரு கூறுவிலையாளருக்கே 4 ஆம் கட்ட வேலையும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெலிகம விற்பனைக் கூடம்

(i) 2014 மாகாண எழுச்சி நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் ரூபா 8,062,196 மற்றும் ஹதபிம அதிகாரசபையின் ரூபா 2,112,501 என்பன செலவிடப்பட்டு அரைவாசி நிறைவேறிய நிலையில் 2015 ஒக்தோபர் 18 அன்று அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்ட விற்பனைக்கூடக் கட்டிடத்தின் சில இடங்களில் சுவர்களில் கீறுகள் ஏற்பட்டிருந்தன. சில இடங்களில் கறையான் புற்றுக்கள் தோன்றியிருந்தன. அவற்றைத் திருத்தி மீண்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை 2017 மார்ச் 27 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டு வேலை நடைபெறாதிருந்த 03 விடயங்களுக்கு ரூபா 44,086 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) பவுடர் கோட்டட் க்ளேஸ்ட்டோர் (POWDER COATED GLAZED DOOR) தொடர்பாக ரூபா 150,132 கொடுப்பனவு செய்யப்பட்ட போதும், அக்கதவுகளுக்கு பவுடர் கோட்டட் மாத்திரமே இடப்பட்டு க்ளோஸ் இடப்படாதிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 1,081,657 பெறுமதியான பொருட் கொள்வனவுகள் மற்றும் ரூபா 528,700 க்கான சுத்திகரிப்புச்சேவை என்பவற்றிற்கு தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.10 மற்றும் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறி பெறப்படாததுடன் எழுத்து மூல உடன்படிக்கையில் ஈடுபடவுமில்லை.

**4.6 முறைப்படி சுவீகரிக்கப்படாத காணிகளில் / சொத்துக்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

2017 யூன் 30 ஆந் திகதியளவிலும் முறைப்படி சுவீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த இங்கிரிய மற்றும் வெலிகம பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 2 காணிகளில் முறையே ரூபா 5,442,792 மற்றும் ரூபா 10,174,698 எனச் செலவிட்டு 02 விற்பனைக் கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

4.7 பதவியணியினர் நிர்வாகம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூன் 15 ஆந் திகதிய டீஎம்எஸ்/1578 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு 2017 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் ஆட்சேர்ப்பு நடைபெறாததுடன், ஆட்சேர்ப்பு நடைமுறையும் அங்கீகரிக்கப்படாதிருந்தது.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களது ஒப்பந்தக் காலம் முடிவுற்றிருக்கையில் உடன்படிக்கையின்றியும் காலநீடிப்பின்றியும் 2015 நவெம்பர் முதல் 2017 மார்ச் வரையான காலப்பகுதிக்கு ரூபா 2,203,880 மொத்தச் சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத நிதி உத்தியோகத்தர் மற்றும் காவலாளி பதவிகளுக்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 2017 பெப்ரவரி 28 வரை ரூபா 409,945 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிதிப் பிரமாணம் 71(1)(ஆ) இன்படி செயற்படாது விற்பனைச் செயற்திட்டத்தின் கீழ் 21 அங்கீகரிக்கப்பட்ட விற்பனை உதவியாளர் பதவிக்கு விலைப்பட்டியலைச் சேகரிப்பவர் எனும் பதவி நாமம் சூட்டி 06 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 1,756,754 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

4.8 வாகனப் பாவனை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமத்தொழில் அமைச்சினது செயலாளரின் 2015 யூலை 15 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 1,120,000 பெறுமதியான 10 கையால் இயக்கப்படும் டிறக்டர்களை கமத்தொழில் அமைப்புகளுக்கு வழங்குமாறு அங்கீகாரம் வழங்கி ஓராண்டிற்கு மேலாகியும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கமத்தொழில் அமைச்சிற்குச் சட்டபூர்வ உரித்துடையதும் ரூபா 900,000 கிரயமுடையதுமான லொறி ஒன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், அதன் உரித்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கத் திறைசேரிச் செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் விற்பனைச் செயற்திட்டங்களுக்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 5.2 பொருட் கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொள்வனவுத் திட்டம் குறித்த ஆண்டு ஆரம்பமாவதற்கு முன்னரே தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட் கொள்வனவுத் திட்டம் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றே அமைச்சினது செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. திருத்தஞ் செய்யப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டம் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடங்காத ரூபா 1,832,698 பெறுமதியுடைய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2006 தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அதிகாரசபைக்கென குறைந்தது 3 ஆண்டுகளுக்கான பிரதான பொருட் கொள்வனவுத் திட்டமேனும் தயாரிக்கப்பட்டிராததுடன், 2016 ஆம் ஆண்டினது விற்பனைச் செயற்திட்டத்தின் பொருட்டுக் கொள்வனவு செய்வதற்கெனத் தயாரிக்கப்பட்ட ரூபா 41,900,000 பெறுமதிக்கான பொருட்கொள்வனவுத் திட்டத்தின் பொருட்டு தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கொள்வனவுக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை ஹதபிம அதிகாரசபை மற்றும் விற்பனைச் செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தரை மாத்திரமே கொண்டிருந்தது. உள்ளகக் கணக்காய்விற்கு 3,900 மனித மணித்தியாலங்களைப் பயன்படுத்தி 9 களங்களினது 33 செயற்பாடுகளைக் கணக்காய்வு செய்யத் திட்டமிட்டிருந்தபோதும், மீளாய்வாண்டில் 06 செயற்பாடுகள் மாத்திரமே உள்ளடங்குமாறு 14 கணக்காய்வு ஐய வினாக்கள் மாத்திரமே வழங்கப்பட்டு அவை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் பொருட்டு ரூபா 63,238,292 அபிவிருத்திச் செலவினம் மேற்கொள்ளப்பட்டபோதும், அது தொடர்பாக ஒரு கணக்காய்வு ஐய வினா மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தினது சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டுடன் பாதீட்டு ஐந்தொகை, காசுப் பாய்ச்சல் கூற்று, செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு செய்யப்பட்ட முதலீட்டுச் செலவின அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மேற்படி சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட இறுதிப் பாதீட்டு அறிக்கை ஆண்டின் ஆரம்பத்திற்கு 15 நாட்களுக்கு முன்னரே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், 5.2.4 ஆம் பந்தியின் பிரகாரம் வரைவுப் பாதீட்டு அறிக்கை ஒன்றும் ஆண்டின் ஆரம்பத்திற்கு 03 மாதங்களுக்கு முன்னரே பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படாதுமிருந்தது.

(இ) இலஙகை ஹதபிம அதிகார சபையின் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டிள் உள்ளடங்கிய ரூபா 1,888,500 பெறுமதியுடைய 07 செலவின விடயங்களது திருத்தங்களுக்கான அங்கீகாரம் 2017 சனவரி 22 அன்று பெறப்பட்டிருந்தது.

(ஈ) மேற்படி அவதானிப்புகளின் பிரகாரம் பாதீடானது நிதிக்கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 5.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

நிதி நிலைமைக் கூற்றில், ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட காணிச்சீர்த்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து 2004 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 2,094,280 தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டத்தில் கவனம் மேற்கொள்ளப்பட்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கு பணிப்புரை வழங்கப்பட்ட போதும், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அது தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கீட்டு நியமமும் கொள்கைகளும் முறைப்படி கடைப்பிடிக்கப்படாமை |
| (ஆ) பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள் | அநேக ஆண்டுகளாக நிலவி வரும் கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை / மீதிகள் உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | மதிப்பீட்டுத் தயாரிப்பில் நலிவுகள் |
| (ஈ) பதவியணி நிர்வாகம் | அங்கீகரிக்கப்படாத பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பு மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (உ) வாகனக் கட்டுப்பாடு | (i) வாகனக் கட்டுப்பாடு சம்பந்தமாக முறையான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிராமை. |

| | | |
|---|---|---|
| | | (ii) மாதாந்தப் பொழிப்பு தயாரிக்கப்படாமை |
| (ஊ) | உள்ளகக் கணக்காய்வு | (i) வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை<br>(ii) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்காமை |
| (எ) | பொருட் கொள்வனவு நடைமுறை | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கிணங்க நடவடிக்கை எடுக்காமை |
| (ஏ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படாமை மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாக அது பயன்படுத்தப்படாமை |
| (ஐ) | சொத்துக் கட்டுப்பாடு | பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் இருத்தல் |

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்/எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி